**செ. கு. எண்**: 277 **நாள்**: 28.12.2011

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – **28.12.2011**

விருதுநகர் மாவட்டம், விருதுநககர் வட்டம், வி.சொக்கலிங்காபுரம் கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் இன்று **(28.12.2011)** ஏற்பட்ட வெடி விபத்தில் விருதுநகர் வட்டம், வாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவரின் மகன் சங்கரலிங்கம், திரு. காளிமுத்து பிள்ளை என்பவரின் மகன் முருகேசன் பிள்ளை, திரு. ராமசாமி பிள்ளை என்பவரின் மகன் சுந்தரராஜ பிள்ளை மற்றும் சதானந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா தேவர் என்பவரின் மகன் மாரிமுத்துத் தேவர் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்வெடி விபத்து சம்பவத்தில் இரண்டு பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் இருவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், விருதுநகர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள இருவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**